**வலல்லாவிட்ட பிரதேச சபை**

**களுத்துறை மாவட்டம்**

---

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 நிதிக் கூற்றுக்களைச் சமர்ப்பித்தல்

மீளாய்வாண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் 2017 மார்ச் 20 ஆந் திகதியன்றும் முன்னைய ஆண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் 2016 ஆகஸ்ட் 15 ஆந் திகதியன்றும் கணக்காய்வுக்குச் சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன், மீளாய்வாண்டிற்கான கணக்காய்வாளர் தலைமை அதிபதியினது அறிக்கை 2017 செப்டம்பர் 15 ஆந் திகதியன்று சபையின் செயலாளருக்கு அனுப்பி வைக்கப்பட்டுமிருந்தது.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இவ்வறிக்கையின் 1.3 ஆம் பந்தியில் சுட்டிக் காட்டப்பட்டவாறான விடயங்களால் ஏற்படும் தாக்கங்களைத் தவிர, 2016 டிசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமை மற்றும் அத்தினத்தில் முடிவுற்ற ஆண்டிற்கான அதன் நிதிச் செயலாற்றல் என்பன பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களுக்கேற்ப உண்மையாகவும் நியாயபூர்வமாகவும் நிதிக் கூற்றுக்களில் வெளிப்படுத்தப்படுகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.3 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

#### 1.3.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) மீளாய்வாண்டில் நன்கொடையாகப் பெறப்பட்ட ரூபா 361,031 பெறுமதியான நூலகப் புத்தகங்களை மூலதனமாக்கும்போது நூலகப் புத்தகக் கணக்கில் வரவு வைக்கப்பட்டு மூலதனத்திற்கு வருவாயின் பங்களிப்புக் கணக்கில் செலவு வைக்கப்படுவதற்குப் பதிலாக மூலதனத்திற்கு வருவாயின் பங்களிப்புக் கணக்கு ரூபா 361,031 அதிகரித்துக் காட்டப்பட்டிருந்தது.

(ஆ) மீளாய்வாண்டில் கைவிரல் அடையாள இயந்திரத்தைப் பழுதுபார்ப்பதற்கு ஏற்பட்ட ரூபா 35,075 செலவு மூலதனமாக்கப்பட்டமையால் இயந்திரம் மற்றும்

இயந்திர சாதனக் கணக்கு ரூபா 35,075 அதிகமாகவும் மூலதனத்திற்கு வருவாயின் பங்களிப்புக் கணக்கு ரூபா 35,075 அதிகமாகவும் காட்டப்பட்டிருந்தன.

(இ) மீளாய்வாண்டின் இறுதியில் உள்ளவாறான நிலையான வைப்புகள் ரூபா 99,888 குறைவாகக் கணக்கில் காட்டப்பட்டிருந்தன.

(ஈ) உள்ளூர்க் கடன் அபிவிருத்தி நிதியத்திலிருந்து பெறப்பட்ட கடனுக்கு மீளாய்வாண்டின்போது கொடுப்பனவு செய்யப்பட்ட கடன் தவணைப் பணமாகிய ரூபா 218,569 மற்றும் இனங்காணப்படாத ரூபா 1,053 என்பன மூலதனச் செலவினத்தின் கீழ் காட்டப்பட்டதால் ஆண்டிற்கான மூலதனச் செலவினம் ரூபா 219,622 அதிகமாக நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்டிருந்தது.

(உ) 2015 ஆம் ஆண்டிற்கான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கையில் உள்ள 2.2.1(அ) திருத்தஞ் செய்யப்படுகையில் மூலதனச் செலவினக் கடன் கொடுத்தோர் கணக்கில் ரூபா 50,000 வரவு வைக்கப்பட்டும் திரண்ட நிதியத்தில் ரூபா 50,000 செலவு வைக்கப்பட்டும் இருத்தல் வேண்டும். எவ்வாறாயினும் மூலதனச் செலவினக் கடன் கொடுத்தோர் கணக்கில் வரவு வைக்கப்பட்டு பெற வேண்டிய முத்திரைக் கட்டணக் கணக்கில் செலவு வைக்கப்பட்டமையால் மீளாய்வாண்டினது பெற வேண்டிய முத்திரைக் கட்டணம் ரூபா 50,000 குறைவாகவும் திரண்ட நிதியம் ரூபா 50,000 குறைவாகவும் காட்டப்பட்டிருந்தன.

(ஊ) மீளாய்வாண்டிற்கான களஞ்சிய வழங்கல்களின் பிரகாரம் பொதுக் களஞ்சியச் செலவினம் ரூபா 365,984 ஆகியபோதும், நிதிக்கூற்றுக்களில் அதனை ரூபா 324,708 ஆகக் காட்டியமையால் பொதுக் களஞ்சியச் செலவினம் ரூபா 41,276 குறைத்துக் காட்டப்பட்டிருந்தது.

(எ) மீளாய்வாண்டில் கொடுப்பனவு செய்ய வேண்டிய ரூபா 75,686 தொடர்பாகக் கடன் கொடுத்தோருக்கான நிதியேற்பாடு மேற்கொள்ளப்படாததால் ஆண்டிற்கான கடன் கொடுத்தோர் தொகையும் செலவினமும் ரூபா 75,686 குறைவாக நிதிக் கூற்றுக்களில் காட்டப்பட்டிருந்தன.

(ஏ) மீளாய்வாண்டின் இறுதியில் உள்ளவாறு உள்ளூர்க் கடன் அபிவிருத்தி நிதியத்திற்குரிய வட்டி ரூபா 63,405 ஆக வேண்டுமெனினும், நிதிக்கூற்றுக்களில் ரூபா 67,503 ஆக அது காட்டப்பட்டமையால் ஆண்டிற்கான செலவினம் ரூபா 4,098 அதிகரித்துக் காட்டப்பட்டிருந்தது.

(ஐ) மீளாய்வாண்டில் ஏல விற்பனை மூலம் விற்பனை செய்யப்பட்ட 09 தளபாடங்கள், உபகரணங்கள் என்பவற்றின் கிரயத்தைக் கணித்து தளபாட, உபகரணக் கணக்கிலிருந்தும் மூலதனத்திற்கு வருவாயின் பங்களிப்புக் கணக்கிலிருந்தும் அவற்றை நீக்கியிருக்கவில்லை.

(ஒ) மீளாய்வாண்டினது மின்சார உபகரணச் செலவினம் ரூபா 219,552 ஆகியபோதும், அதனை ரூபா 299,090 ஆக நிதிக்கூற்றுக்களில் காட்டியமையால் ஆண்டிற்கான செலவினம் ரூபா 79,538 அதிகரித்துக் காட்டப்பட்டிருந்தது.

**1.3.2 கணக்காய்விற்கான சான்றின்மை**

---

தேவையான தகவல்கள் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்படாமையால் ரூபா 5,236,979 கூட்டுத் தொகையுடைய கொடுக்கல் வாங்கல்களைக் கணக்காய்வில் திருப்திகரமாகச் சான்றுறுதிப்படுத்த முடியவில்லை.

**2. நிதிசார் மீளாய்வு**

---

**2.1 நிதிப் பெறுபேறுகள்**

---

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக் கூற்றுக்களின் பிரகாரம், 2016 டிசெம்பர் 31 இல் முடிவுற்ற ஆண்டிற்கான சபையின் மீண்டுவரும் செலவினத்திலும் கூடிய வருவாய் ரூபா 8,907,987 ஆகும். இதனோடொத்த முன்னைய ஆண்டினது மீண்டுவரும் செலவினத்திலும் கூடிய வருவாய் ரூபா 7,058,430 ஆகும். இதற்கமைய, முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் மீளாய்வாண்டினது நிதிக்கூற்றுக்களில் ரூபா 1,849,557 அதிகரிப்பு தென்பட்டது.

வருவாயில் ரூபா 7,592,891 அதிகரிப்பும் செலவினத்தில் ரூபா அதிகரிப்பும் நிதிக் கூற்றுக்களில் ரூபா 1,849,557 அதிகரிப்புக்கான பிரதான காரணிகளாகும்.

**2. வருவாய் நிர்வாகம்**

---

**2.2.1 மதிப்பிடப்பட்ட வருவாய், உள்ளவாறான வருவாய் மற்றும் வருவாய் நிலுவை**

---

மீளாய்வாண்டின் பொருட்டுச் சமர்ப்பிக்கப்பட்ட மதிப்பிடப்பட்ட வருவாய் உள்ளவாறான வருவாய், வருவாய் நிலுவை என்பன தொடர்பான தகவல்கள் கீழே காணப்படுகின்றன.

| | வருவாய்க்கான விடயம் | மதிப்பிடப்பட்ட வருவாய் | உள்ளவாறானது | டிசெம்பர் 31 இல் உள்ளவாறான திரண்ட நிலுவை |
|---|---|---|---|---|
| | | ரூபா '000 | ரூபா '000 | ரூபா '000 |
| (i) | தீர்வையும் வரியும் | 2,978 | 1,909 | 2,208 |
| (ii) | குத்தகை வாடகை | 4,234 | 4,185 | 70 |
| (iii) | அனுமதிப் பத்திரக்கட்டணம் | 72 | 70 | 02 |

### 2.2.2 தீர்வை வரி

(அ) மீளாய்வாண்டில் பட்டியலிடப்பட்ட தீர்வை வரி ரூபா 2,011,479 ஆகும். அதில் 65 சதவீதமான ரூபா 1,316,018 மாத்திரம் அறவிடப்பட்டிருந்தது.

(ஆ) மீளாய்வாண்டின் ஆரம்பத்திலான நிலுவை மீதி ரூபா 1,905,628 ஆகும். இதில் ரூபா 938,654 அல்லது 49 சதவீதம் மாத்திரம் அறவிடப்பட்டிருந்தது. ஆண்டின் இறுதியிலான மொத்த நிலுவை ரூபா 1,632,553 ஆகும். இதற்கமைய, மீளாய்வாண்டினது ஒட்டு மொத்தத் தீர்வை வரியை அறவிடுவதிலான செயல் முன்னேற்றம் 58 சதவீதமாகியது.

(இ) 2016 டிசெம்பர் 31 இல் உள்ளவாறான ரூபா 1,632,553 தீர்வை வரி வருவாயில் 966 கூறுகளிலிருந்து ரூபா 448,050 ஒன்று முதல் 03 ஆண்டுகளாகவும், 1131 கூறுகளிலிருந்து ரூபா 705,007 மூன்று முதல் 05 ஆண்டுகளாகவும் அறவிடப்படாதிருந்தமை உள்ளடக்கப்பட்டிருந்ததுடன், அவற்றை அறவிடுவதற்குச் சபை முறையாக நடவடிக்கைகளை மேற்கொள்ளவுமில்லை.

### 2.2.3 ஏக்கர் வரி

மீளாய்வாண்டின் ஆரம்பத்தில் ரூபா 74,796 ஏக்கர் வரி நிலுவை மீதியாக இருந்தது. அதில் 2016 டிசெம்பர் 31 ஆந் திகதியளவில் 23 சதவீதமான ரூபா 17,225 மாத்திரமே அறவிடப்பட்டிருந்தது. தற்போது பட்டியலிடப்பட்டிருந்த தொகை ரூபா 14,822 ஆகும். அதில் 37 சதவீதமான ரூபா 5,502 மாத்திரமே அறவிடப்பட்டிருந்தது.

### 2.2.4 ஏனைய வருவாய்

(அ) வர்த்தக வரி

(i) மீளாய்வாண்டின் ஆரம்பத்தில் வர்த்தக வரி நிலுவை மீதி ரூபா 267,450 ஆகவிருந்தது. அதில் 62 சதவீதமான ரூபா 165,270 மாத்திரமே ஆண்டின்போது அறவிடப்பட்டிருந்தது. தற்போது பட்டியலிடப்பட்டிருந்த தொகை ரூபா 775,440 ஆகும். அதில் 59 சதவீதமான ரூபா 461,010 மாத்திரமே அறவிடப்பட்டிருந்தது.

(ii) வர்த்தக வரி வருமான நிலுவையாக 323 குத்தகையாளரிடமிருந்து மீளாய்வாண்டினதும் முன்னைய ஆண்டினதும் பொருட்டு ரூபா 416,610 அறவிடப்பட வேண்டியிருந்தபோதும், அதனை அறவிடுவதற்கான நடவடிக்கை எடுக்கப்படவில்லை.

(ஆ) வேலைகள் தொடர்பான வரி

(i) 2015 ஆம் ஆண்டின்போது அறவிடப்படாத வேலைகளுக்கான வரி வருவாய் ரூபா 154,460 ஆகும். அக் குத்தகையாளர்களிடமிருந்து 73 சதவீதமான ரூபா 112,750 மாத்திரமே ஆண்டின்போது அறவிடப்பட்டிருந்தது.

(ii) நடப்பாண்டில் வேலைகளுக்கெனப் பட்டியல் வழங்கப்பட்ட தொகை ரூபா 175,950 ஆகும். அதில் 71 சதவீதமான ரூபா 126,000 அறவிடப்பட்டிருந்தது. நடப்பாண்டிற்குரிய வேலைகளுக்கான வரி வருவாயையும் ஆண்டின்போது சேகரிக்க முடியாது போனது.

(iii) மீளாய்வாண்டினதும் முன்னைய ஆண்டினதும் வேலைகளுக்கான வரி வருவாய் மீளாய்வாண்டின் இறுதியில் உள்ளவாறு 75 பேரிடமிருந்து ரூபா 91,660 நிலுவையாக இருந்தது. அந்நிலுவை மீதிகளை அறவிடுவதற்கு வழக்குகள் தொடுக்கப்பட்டிருக்கவுமில்லை.

(இ) இறைச்சிக் கடை வருவாய்

மீளாய்வாண்டின் ஆரம்பத்திலிருந்த இறைச்சிக்கடை வருவாய் ரூபா 56,636 ஆகும். ஆண்டின்போது அதில் எதுவுமே சேகரிக்கப்படவில்லை.

(ஈ) பொதுச் சந்தையில் உள்ள கடைகளுக்கான வரி

ஒரே குத்தகையாளர்களுக்குப் பொதுச் சந்தையில் உள்ள 06 கடைகளும் 2010 ஆம் ஆண்டுக்கு முன்னரிருந்தே குத்தகைக்கு வழங்கப்பட்டிருந்தன. சில ஆண்டுகளில் அக்கடைகளுக்கான உடன்படிக்கைகள் கைச்சாத்திடப்பட்டிருக்காததுடன் மாதாந்தக் குத்தகைப் பணமும் அறவிடப்படாதிருந்தது.

**2.2.5 நீதிமன்றத் தண்டப் பணமும் முத்திரைக் கட்டணமும்**

மாகாண சபையின் தலைமைச் செயலாளரிடமிருந்தும் ஏனைய அதிகாரிகளிடமிருந்தும் 2016 டிசெம்பர் 31 இல் உள்ளவாறு பெற வேண்டிய தொகை பின்வருமாறு.

| | | ரூபா |
|---|---|---|
| (i) | நீதிமன்றத் தண்டப்பணம் | 8,209,907 |
| (ii) | முத்திரைக் கட்டணம் | 2,779,375 |

**3. செயற்பாட்டு மீளாய்வு**

**3.1 செயற்பாட்டு / முகாமைத்துவ வினைத்திறமையின்மை**

(அ) வங்கிக் கணக்கிணக்கம்

(i) மக்கள் வங்கிக் கணக்கு இலக்கம் 261-001-9-0000001 க்குரிய 2016 டிசெம்பர் 31 இல் உள்ளவாறு தயாரிக்கப்பட்ட வங்கிக் கணக்கிணக்கக் கூற்றின் பிரகாரம் தேறாத காசோலைகள் மற்றும் காசு ஆக ரூபா 4,845,273 காட்டப்பட்டிருந்தது. அம்மீதிகளுள் 2010, 2011, 2012, 2013, 2014, 2015, 2016 ஆம் ஆண்டுகளுக்குரிய முறையே ரூபா 6,255 , ரூபா 1,421 , ரூபா 230,000 , ரூபா 2,856 ரூபா 10,000 , ரூபா 39,400 ரூபா 4,555,346 என்பன இருந்ததுடன், அம்மீதிகளை வங்கியில் விசாரித்தறிந்து தொடர் நடவடிக்கைகளை மேற்கொள்ளவும் கணக்குகளைத் திருத்தவதற்கும் நடவடிக்கை எடுக்கப்படவில்லை.

(ii) 2016 டிசெம்பர் 31 இல் உள்ளவாறு கையில் உள்ள காசாக ரூபா 4,549,340 காட்டப்பட்டிருந்தபோதும், அதற்குரிய விபரம் கணக்காய்வுக்குச் சமர்ப்பிக்கப்படவில்லை.

(iii) மக்கள் வங்கிக் கணக்கு இலக்கம் 261-001-9-0000044 க்குரியதும் 2012 முதல் இருந்து வருவதுமான ரூபா 836,245 க்கான 11 கணக்கு மீதிகளை 2017 யூன் 20 வரை தீர்த்து வைப்பதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

(ஆ) நிலையான சொத்துப் பதிவேட்டை முறையாகப் பேணாமை

---

(i) மீளாய்வாண்டு முடிவில் உள்ளவாறு நிதிக் கூற்றுக்களுடன் சமர்ப்பிக்கப்பட்ட பட்டோலையின் பிரகாரம் சபைக்குரிய வாகனங்கள் 38 எனினும், நிலையான சொத்துப் பதிவேட்டில் அவற்றுள் 11 வாகனங்களே குறித்துக் கொள்ளப்பட்டிருந்தன.

(ii) நிலையான சொத்துப் பதிவேட்டில் பதிவு செய்யப்பட்டபோதும் நிதிக் கூற்றுக்களுடன் சமர்ப்பிக்கப்பட்ட பட்டோலையில் குறிப்பிடப்படாத 06 வாகனங்கள் இருந்தன.

(இ) களஞ்சியப் பதிவேட்டை முறையாகப் பேணாமை

---

பொதுக் களஞ்சியக் கையிருப்புப் புத்தகங்களில் ஆரம்ப மீதி, ஆண்டின் போதிலான கொள்வனவுகள், வழங்கல்கள் என்பன முறைப்படி பதிவு செய்யப்படாமையால் நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்ட ரூபா 412,900 தொகையுடைய பொதுக் களஞ்சிய மீதியைப் பரிசீலிக்க முடியவில்லை.

(ஈ) அறவிடப்படாத ஊழியர் கடன்

---

2016 டிசெம்பர் 31 இல் உள்ளவாறு அறவிடப்படாதிருந்த ஊழியர் கடன் மீதி ரூபா 50,701 ஆகும். அதில் 2008 முதல் நிலவிவரும் வேலை இடை நிறுத்தம் செய்யப்பட்ட ஊழியர் ஒருவரது ரூபா 24,850 கடன் மீதியும், 2012 முதல் வேலை இடமாற்றம் பெற்றுச் சென்றிருந்த ஊழியர்களிடமிருந்து அறவிடப்பட வேண்டிய ரூபா 17,101 மீதியும் 2014 முதல் சேவை நீங்கிய மற்றும் ஓய்வு பெற்ற உத்தியோகத்தர்களிடமிருந்து அறவிடப்பட வேண்டிய ரூபா 8,750 மீதியும், உள்ளடங்கியிருந்தன. அக்கடன் மீதிகளை அறவிடுவதற்கு முறையான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படவில்லை.

(உ) அறிவித்தல் பலகை வருவாய்

---------------------------------------------------------

வலல்லாவிட்ட பிரதேச சபை 2016 ஆம் ஆண்டிற்கான வருவாயை அறவிடுவதற்கு வர்த்தமானி அறிவித்தல்களை வெளியிடாமையால் சபையின் அதிகாரத்துக்குட்பட்ட இடங்களில் உள்ள 33 அறிவித்தல் பலகைகளிலிருந்து பெற வேண்டிய அனுமதிப் பத்திர வருவாய் இழப்பிற்குள்ளானது.

(ஊ) காணிப் பதிவேடு / உரித்துறதி

------------------------------------------------------------

உரித்துறுதிகளுக்குரிய காணிகள் காணிப் பதிவேட்டில் பதிவு செய்யப்படாத சந்தர்ப்பங்களும் அக்காணிகளது உரித்தை உறுதி செய்வதற்கான சான்றுகள் சமர்ப்பிக்கப்படாத சந்தர்ப்பங்களும் அவதானிக்கப்பட்டன.

(எ) வாகனக் கட்டுப்பாடு

------------------------------------------

(i) இரு சாரதிகள் மாத்திரமே 04 டிரக்டர்களுக்கான பணியில் ஈடுபட்டிருந்தனர். பயன்படுத்தக் கூடியதாகவிருந்த 02 வாகனங்கள் 1 ½ ஆண்டுகளுக்கு மேலாகப் பயன்படுத்தப்படாதிருந்தன.

(ii) உள்ளூராட்சி அமைச்சிலிருந்து 2015 பெப்ரவரி 20 ஆந் திகதி பெறப்பட்ட கம்பெக்டர் வாகனம் அந்நாள் தொடக்கம் பயன்படுத்தப்படாதிருந்தது.

(iii) சிறிய பழுதுபார்த்தலுடன் பாவனையில் ஈடுபடுத்தப்படக் கூடிய 04 வாகனங்கள் 02 ஆண்டுகளுக்கு மேலாகப் பயன்படுத்தப்படாது இருந்தன. 02 ஆண்டுகளுக்கு மேலாகச் செயற்படாதிருந்த 03 வாகனங்களைப் பழுதுபார்ப்பதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வில்லை.

(iv) நெடுங்காலமாகச் செயற்படாதிருக்கும் இலக்கமிடப்படாத புறெய்லரையும் பழுதடைந்த கெப் வண்டி ஒன்றையும் கைதவிர்ப்புச் செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படவில்லை.

(v) பாவனையில் ஈடுபடுத்த முடியாத நிலையில் ஏறக்குறைய 5 ஆண்டுகளாக இருந்துவரும் டிறெய்லர் ஒன்று பழுதுபார்க்கப்பட்டிருந்தது. எனினும், அதன் பின்னர் அது பயன்படுத்தப்படாதிருந்தது.

**3.2 ஒப்பந்த நிர்வாகம்**

**----------------------------------**

(அ) மாலபே, பட்டகெலே பகல், இரவு கைப்பந்து விளையாட்டு மைதானத்தை அமைக்கும் செயற்திட்டம்

---------------------------------------------------------------------------------------------------------------------

2014 ஆம் ஆண்டினது கமநெகும நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் மாலபே, பட்டகெலே பகல், இரவு விளையாட்டு மைதானத்தை அமைப்பதற்கான செயற்திட்டத்திற்குக் குறித்த ஒப்பந்தகாரரிடம் ரூபா 882,000 வழங்கப்பட்டிருந்தது. இது தொடர்பாகப் பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) மதிப்பீட்டின் 03 ஆம் இலக்க விடயத்திற்கு முரணாக களி மண்ணுக்குப் பதிலாக சாதாரண மண் போடப்பட்டு ஒரு கியூப் ரூபா 6,500 வீதம் 12.25 கியூப்பிற்கு ரூபா 79,625 கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது.

(ii) மதிப்பீட்டின் 05 ஆம் இலக்க விடயத்தின் பிரகாரம் நுண்ணிய மணலையும் களி மண்ணையும் பயன்படுத்துவதற்குப் பதிலாக அவ்விடத்தில் வெட்டி எடுக்கப்பட்ட மண்ணிற்கு ரூபா 73,575 கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது.

(iii) மதிப்பீட்டின் 08 ஆம் இலக்க விடயத்தின் பிரகாரம் வொலிபோல் வலையைப் பொருத்துவதற்கு ரூபா 4,500 கொடுப்பனவு செய்யப்பட்டபோதும், வொலிபோல் வலை வழங்கப்படவில்லை.

(iv) மதிப்பீடு தயாரிக்கப்பட்டிராததுடன், இவ் விளையாட்டு மைதானத்துக்கு மின்சாரம் வழங்கப்பட்டிராததுடன், ரூபா 138,000 வழங்கப்பட்டு பொருத்தப்பட்ட ஹெலஜன் விளக்கும் செயற்படாதிருந்தது.

(v) முறையான நியமங்களின்றியும் விளையாட்டு மைதானத்தைச் சென்றடையும் பாதை திறமற்றும் இருந்ததால் செலவிடப்பட்ட ரூபா 882,000 பயனற்ற செலவினமாகியது.

(ஆ) இத்தேபான எனும் இடத்தில் மயானம் ஒன்றை அமைத்தல்

2014 மாகாண எழுச்சி அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் இத்தேபான எனும் இடத்தில் மயானம் அமைக்கும் I ஆம் கட்ட வேலைக்கு ரூபா 8,116,883 (பெறுமதி சேர் வரி நீங்கலாக) மதிப்பீடு செய்யப்பட்டு அவ் வேலை 2014 ஒக்டோபர் 30 ஆந் திகதியன்று வெளி நபர்களிடம் ஒப்படைக்கப்பட்டிருந்தது. உடன்படிக்கைப் பிரகாரம் இரு மாதங்களுக்குள் வேலை முடிவடைய வேண்டுமாயினும், 2016 நவெம்பர் 18 ஆந் திகதியளவிலும், வேலை முடிவடையாததால் தாமதக் கட்டணமாக ரூபா 34,300 அறவிடப்பட்டிருந்தது. வேலையை ஆரம்பிப்பதற்கு முன்னர் மத்திய சுற்றாடல் அதிகார சபையின் அனுமதிப் பத்திரம் பெறாததுடன் பொருத்தமற்ற இடமென்பதால் வேறு இடத்தில் அதனை அமைக்குமாறு சுற்றாடல் அதிகார சபை அறிவித்திருந்தது. எனினும், அச்சிபார்சுக்கு முரணாக வேலை தொடர்ந்தவாறிருந்தது.

## 3.3 திண்மக் கழிவுப் பொருள் முகாமைத்துவம்

காய்ந்துபோகும் கழிவுகளின் பொருட்டு கொம்போஸ்ட் பிரிவு ஒன்றைச் சபை நடாத்திய போதும், பின்வரும் குறைபாடுகள் அவதானிக்கப்பட்டன.

(i) திண்மக் கழிவுப் பொருள் முகாமைத்துவத்திற்கான உப விதிகள் தயாரிக்கப்படவில்லை.

(ii) கழிவுப் பொருள் முகாமைத்துவத்திற்கான செலவினத்தை ஈடு செய்ய கழிவுப் பொருள் வரி அறவிடப்படவில்லை.

(iii) கழிவுப் பொருள் அகற்றப்படும் காணி தொடர்பாக அனுமதிப் பத்திரம் பெறப்படவில்லை.

(iv) கழிவுப் பொருட்களை வெவ்வேறாக்கும் முறைமை ஒன்று இல்லாததுடன், பிரித்தொதுக்கப்படும் இரும்பு / பிளாஸ்டிக் / கடதாசி என்பவற்றின் விற்பனை மூலம் பெறப்படும் வருவாயைச் சபை பெற்றிருக்கவில்லை.

## 4. முறைமைகளும் கட்டுப்பாடுகளும்

---

பின்வரும் முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டு அம்சங்களில் சபையின் விசேட கவனம் கோரப்படுகின்றது.

(அ) கணக்கீடு

(ஆ) வருவாய் நிர்வாகம்

(இ) ஒப்பந்த நிர்வாகம்

(ஈ) பாதீடு

(உ) வாகனக் கட்டுப்பாடு